செ.வெ.எண்: 28 / ஏப்ரல் /2020 நாள்: 10.04.2020

**திருச்சிராப்பள்ளி மாநகர எல்லைக்குள் பொதுமக்கள் அத்தியாவசிய தேவைகளான காய்கறி/பழங்கள்/மளிகைப் பொருட்கள்/இறைச்சி மற்றும் மீன் முதலானவற்றினை தங்களது இல்லத்திலிருந்து இரண்டு கிலோ மீட்டர் (2 கி.மீ) சுற்றளவிற்குள் பூர்த்தி செய்துக் கொள்ள கேட்டுக் கொள்ளப்படுகிறது. மருத்துவ அவசர நிலை மற்றும் அலுவலக பணி தவிர திருச்சிராப்பள்ளி மாநகரில் இரண்டு கிலோ மீட்டருக்கு (2 கி.மீ) மேல் பயணிக்க அனுமதியில்லை.**

**மருத்துவ அவசர நிலை மற்றும் அலுவலக பணிநிமித்தம் தவிர திருச்சிராப்பள்ளி மாநகரில் நான்குசக்கர வாகன பயணம் தடை செய்யப்படுகிறது. என மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.சு.சிவராசு,இ.ஆ.ப., அவர்கள் அறிவிப்பு.**

----------------

தமிழ்நாடு மாநிலத்தில் COVID – 19 கொரோனா வைரஸ் தொற்று நோய் ஏற்படுதலை தவிர்க்கும் பொருட்டு தமிழ்நாடு அரசினால் சில கட்டுப்பாடுகள் அமல்படுத்தப்பட்டுள்ளது. அதன் தொடர்ச்சியாக திருச்சிராப்பள்ளி மாவட்டத்தில் குற்றவியல் நடைமுறைச் சட்டம் பிரிவு 144-இன் கீழ் தடையாணை பிறப்பிக்கப்பட்டு 14.04.2020 வரை நடைமுறையில் உள்ளது. எனினும், பொதுமக்கள் அத்தியாவசிய தேவையென்ற அடிப்படையில் அதிகமாக கூடுகின்ற நிலை உள்ளதாக காவல்துறையினரால் தெரிவிக்கப்பட்டது.

இந்நிலையில் கொரோனா வைரஸ் நோய்த்தொற்று (**COVID – 19)** ஏற்படுதலை தடுத்திடவும், பரவுதலை கட்டுப்படுத்தும் நோக்கிலும், பொதுமக்கள் நடமாட்டத்தினை குறைக்கின்ற வகையிலும் முன்னெச்சரிக்கை நடவடிக்கையாக பின்வரும் கட்டுப்பாடுகள் திருச்சிராப்பள்ளி மாநகரில் அமல்படுத்தப்படுகிறது.

1) மருத்துவ அவசர நிலை மற்றும் அலுவலக பணிநிமித்தம் தவிர திருச்சிராப்பள்ளி மாநகரில் **நான்குசக்கர வாகன பயணம் தடை செய்யப்படுகிறது.**
2) திருச்சிராப்பள்ளி மாநகரில் பொதுமக்கள் நடமாட்டம் தங்களது குடியிருப்பிலிருந்து **இரண்டு கிலோ மீட்டர் (2 கி.மீ)** தொலைவிற்குள் கட்டுப்படுத்தப்படுகிறது.

திருச்சிராப்பள்ளி மாநகர எல்லைக்குள் பொதுமக்கள் அத்தியாவசிய தேவைகளான காய்கறி/பழங்கள்/மளிகைப் பொருட்கள்/இறைச்சி மற்றும் மீன் முதலானவற்றினை தங்களது இல்லத்திலிருந்து **இரண்டு கிலோ மீட்டர் (2 கி.மீ)** சுற்றளவிற்குள் பூர்த்தி செய்துக் கொள்ள கேட்டுக் கொள்ளப்படுகிறது. மருத்துவ அவசர நிலை மற்றும் அலுவலக பணி தவிர திருச்சிராப்பள்ளி மாநகரில் **இரண்டு கிலோ மீட்டருக்கு (2 கி.மீ)** மேல் பயணிக்க அனுமதியில்லை.

எவ்வித பயணத்தின்போதும் ஆதார் வாக்காளர் அடையாள அட்டை போன்ற முகவரி ஆதாரம் கைவசம் வைத்திருத்தல் வேண்டும். மேலும், வீட்டிலிருந்து வெளியே வரும்போது முககவசம் கட்டாயம் அணிந்திருத்தல் வேண்டும் என மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் தெரிவித்துள்ளார்.

**வெளியீடு:**

**செய்தி மக்கள் தொடர்பு அலுவலர்,**
**திருச்சிராப்பள்ளி.**